

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம் அம்மையநாக்கனூரில் நடைபெற்ற ”முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் வெள்ளைச்சாமி, இளம் பேச்சாளர் கேத்ரின்மெர்லினா, நிலக்கோட்டை மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கரிகாலபாண்டியன், அம்மையநாயக்கனூர் பேரூர் கழக பொறுப்பாளர் ராஜாங்கம், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் விமல்குமார், ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உடன் கலந்து கொண்டனர்.

### நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்கள்

# விவரங்களை தர முடியாது: தேர்தல் ஆணையம்!

## உச்சநீதிமன்றத்தில் தகவல்!

புதுடெல்லி, ஆக. 11 -

பீகாரில் நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்களை தர முடியாது என, உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

பீகார் வாக்காளர் பட்டியல் வழக்கு செவ்வாயன்று உச்சநீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வருகிறது. கடந்த வாரம் வழக்கு விசாரணைக்கு வந்த போது நீக்கப்பட்ட வாக்காளர்கள் பட்டியலை ஏன் தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகளுக்கு வழங்கக் கூடாது? என்று கேள்வி எழுப்பியது. இது குறித்து பதில் அளிக்க உத்தர விட்டிருந்தது. (GFX IN)

இதனைத் தொடர்ந்து, பதில் தாக்கல் செய்துள்ள தேர்தல் ஆணையம் நீக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியலை வெளியிட தேவையில்லை. அப்படி வழங்க தேர்தல் ஆணைய சட்ட விதி முறை எதுவும் இல்லை என்று கூறியுள்ளது. வாக்காளர்கள் நீக்கப்பட்ட தற்கான காரணங்களை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறியுள்ளது.

முறையான ஆவணங்களுடன் விண்ணப்பித்தவர்கள் அனைவரும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் இந்த பதிலை கடுமையாக எதிர்க்க மனுதாரர்கள் திட்டமிட்டுள்ளனர். வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் மொத்த பட்டியலை வழங்கத் தேவையில்லை தேர்தல் ஆணையம் பிடிவாதம் பிடித்துள்ளது. வாக்காளர் பட்டியல் மோசடிகளை ராகுல் காந்தி அம்பலப்படுத்திய பிறகு முதல் முறையாக வாக்காளர் பட்டியல் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நாளை விசார ணைக்கு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ராகுல் காந்தி தலைமையில் “இந்தியா” கூட்டணி கட்சிகள் இன்று பேரணி!

## தலைமை தேர்தல் ஆணையரை நேரில் சந்தித்து மனு அளிக்க திட்டம்!

புதுடெல்லி, ஆக. 11 -

இதனிடையே, வாக்காளர் பட்டியல் முறைகேடு, பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் ஆகியவற்றை கண்டித்து டெல்லியில் இந்தியா கூட்டணி கட்சிகள், இன்று பேரணி நடத்த உள்ளனர்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி தலைமையில் தேர்தல் ஆணையம் நோக்கி நாளை பேரணியாக செல்லும், இந்தியா கூட்டணி கட்சிகள், தலைமை தேர்தல் ஆணையரை சந்தித்து மனு அளிக்க திட்டமிட்டுள்ளனர். இன்று காலை 11 மணிக்கு நாடாளுமன்ற வளாகத்தில் இருந்து இந்த பேரணி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ராகுல் காந்தி மீண்டும் வலியுறத்தல்!**

அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் தெரிந்து கொள்ளும் வகையில் டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், வாக்கு திருட்டு என்பது ஒரு நபர், ஒரு வாக்கு என்ற அடிப்படை ஜனநாயக கொள்கையின் மீதான தாக்குதல் என்று கூறியுள்ளார். சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு நேர்மையான வாக்காளர் பட்டியல் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார். அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் தெரிந்து கொள்ளும் வகையில், டிஜிட்டல் வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை என்று ராகுல்காந்தி கூறியுள்ளார்.

இதன்மூலம், பொதுமக்களும், அரசியல் கட்சிகளும் தாங்களாகவே ஆய்வு செய்து கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார். காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், http://votechori.in/ecdemand இணையதளம் அல்லது 9650003420 என்ற எண்ணுக்கு மிஸ்டு கால் கொடுக்குமாறும் கூறியுள்ளார்.

இந்த போராட்டம் ஜனநாயகத்தை காப்பதற்கான போராட்டம் என்றும் மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### பழச்சாறு விளம்பரங்கள்:

# தவறுகளை தடுக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11 -

பான நிறுவனங்கள் 100% பழச்சாறு என்று தவறாக பயன்படுத்துதல் மற்றும் ஏமாற்றும் வகையில் விளம்பரக் காட்சிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

பான நிறுவனங்கள் குறைந்த கூழ் கொண்ட மறுசீரமைக்கப்பட்ட பழ பானங்களை “100% சாறு” என்று தவறாக விளம்ப ரப்படுத்துவதையோ அல்லது ஏமாற்றும் காட்சிகளைப் பயன்படுத்துவதையோ தடுக்க இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (FSSAI) கடுமையான லேபிளிங் விதிமுறைகளை அமல்படுத்தியுள்ளதா?

அப்படியானால், 2023 முதல் பதிவான விதி மீறல்களின் எண்ணிக்கை மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் யாவை?

பான லேபிள்களின் முன்பக்கத்தில் உண்மையான பழம் அல்லது கூழ் உள்ளடக்க சதவீதத்தைக் காட்டுவதை ஒன்றிய அரசு கட்டாயப்படுத்துமா? அப்படியானால்> அதன் விவரங்கள் மற்றும் உண்மையான பழச்சாறுக்கும் செயற்கையாக சுவையூட்டப்பட்ட பானங்களுக்கும் உள்ள வேறுபாடு குறித்து நுகர்வோருக்கு, குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெற்றோருக்குக் கல்வி கற்பிக்க ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு பிரச்சா ரங்கள் குறித்த விவரம் யாவை?

பதில்

அதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தால் (FSSAI) அறிவிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (பெயரிடுதல் மற்றும் காட்சிப்படுத்தல்) விதிமுறைகள்> 2020 இன் அத்தியாயம்2 இன் துணை ஒழுங்குமுறை 5(1) குறிப்பிடுகிறது: “உணவின் பெயர்: ஒவ்வொரு உணவுப் பொட்டலமும், பொட்டலத்தில் உள்ள உணவின் உண்மையான தன்மையைக் குறிக்கும் உணவின் பெயரை> பொட்டலத்தின் முன்பக்கத்தில் கொண்டிருக்க வேண்டும்.”

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் (விளம்பரம் மற்றும் உரிமைகோரல்கள்) விதிமுறைகள், 2018 இன் துணை ஒழுங்குமுறை 4(1), உரிமைகோரல்கள் உண்மையாகவும், தெளிவுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும், தவறாக வழிநடத்தாததாகவும், நுகர்வோர் வழங்கப்பட்ட தகவல்களைப் புரிந்துகொள்ள உதவும் என்றும் குறிப்பிடு கிறது.

லேபிளிங் குறைபாடுகள் மற்றும் பிற தொடர்புடைய விதிமீறல்கள் ஏற்பட்டால், உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் சட்டம், 2006 இன் பிரிவு 52 மற்றும் 53ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் படி அபராதங்கள் விதிக்கப்படுகின்றன. இந்த பிரிவுகள் முறையே தவறான பிராண்டட் உணவு மற்றும் தவறாக வழிநடத்தும் லேபிளிங்/உரிமைகோரல்களுக்கு அபராதங்கள் விதிப்பது தொடர்பானவை.

FSSAI “#HarLabelKuchKehta Hai” என்ற சமூக ஊடக விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்துகிறது. இது குடிமக்களுக்கு தகவலறிந்த தேர்வுகளுக்கான லேபிள் கல்வியறிவை மேம்படுத்துகிறது. உள்ளடக்கங்களை ஈடுபடுத்துதல்> இன்போகிராபிக்ஸ் மற்றும் வீடியோக்கள் மூலம், சமூக ஊடக இடுகைகள் நுகர்வோருக்கு ஊட்டச்சத்து தகவல் (கலோரிகள், கொழுப்புகள்> சர்க்கரைகள், புரதம்> பரிமாறும் அளவு), மூலப்பொருள் பட்டியல்கள்> ஒவ்வாமை எச்சரிக்கைகள் மற்றும் தயாரிப்பு தேதி> காலாவதி தேதி அடையாளங்கள் போன்ற முக்கிய கூறுகள் குறித்து கல்வி கற்பிக்கின்றன.

லேபிள் விழிப்புணர்வு நடவடிக்கைகள் (காட்சி வாரியம், நுக்காட் நாடக், முதலியன மூலம்) பல்வேறு கண்காட்சிகள் (IITF, AAHAR போன்றவை) மற்றும் கண்காட்சிகள் (உணவு விழா, ஈட் ரைட் மேளா போன்றவை) ஆகியவற்றிலும் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறி யுள்ளார்.

# நாமகிரிப்பேட்டை அ.தி.மு.க.வினர் 50க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## நாமக்கல் மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலையில்!



நாமக்கல், ஆக. 11 -

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தை அடுத்த நாமகிரிப்பேட்டை ஒன்றியத்துக்குட்பட்ட திம்ம நாயக்கன்பட்டி, அண்ணாநகர் பகுதியை சேர்ந்த அதிமுகவினர் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

நாமகிரிப்பேட்டை ஒன்றியக் கழக செயலாளர் கே.பி.இராமசுவாமி ஏற்பாட்டில் நடைபெற்ற

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியை விரும்பி,

நாமகிரிப்பேட்டை ஒன்றியம் திம்மநாய க்கன் பட்டி அண்ணா நகர் அதிமுக கிளைச் செயலாளர் பாலசுந்தரம் தலைமையில் முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் ஆர்.சந்திரசேகரன், முன்னாள் ஊராட்சி செயலாளர் வேல்முருகன், கிளைச் செயலாளர் வெங்கடாசலம், வெள்ளையன் அவைத்தலைவர் கிருஷ்ணன், கேசவன் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். கட்சியில் இணைந்தவர்களுக்கு

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி சால்வை அணிவித்து வரவேற்றார்.

தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியை விரும்பி, நாமகிரிப் பேட்டை ஒன்றியக் கழக செயலாளர் கே.பி.இராமசுவாமி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாமகிரிப்பேட்டை ஒன்றியம் திம்மநாயக்க ன்பட்டி அண்ணா நகர் அதிமுக கிளைச் செயலாளர் பாலசுந்தரம் தலைமையில் முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் ஆர்.சந்திரசேகரன், முன்னாள் ஊராட்சி செயலாளர் வேல்முருகன், கிளைச் செயலாளர் வெங்கடாசலம், வெள்ளையன் அவைத்தலைவர் கிருஷ்ணன், கேசவன் உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். கட்சியில் இணைந்தவர்களுக்கு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி சால்வை அணிவித்து வரவேற்றார்.

### புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# உயர் சிகிச்சை - மருத்துவ சேவை வழங்கிட அதிக நிதியை ஒதுக்கிடுவீர்!

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 11 -

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர சிகிச்சை மற்றும் மருத்துவ சேவையை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட தேசிய புற்றுநோய் கட்டமைப்பு (National Cancer Grid) திறம்பட செயல்படுவதற்கு தேவையான அதிக நிதியை ஒதுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஒன்றிய அரசிடம் கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவில் உள்ள புற்றுநோய் நோயாளிகளுக்கு உயர்தர சிகிச்சை மற்றும் மருத்துவ சேவையை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட தேசிய புற்றுநோய் கட்டமைப்பு (National Cancer Grid) திறம்பட செயல்படுவதற்கு தேவையான அதிக நிதியை ஒதுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இந்த கட்டமைப்பின் கீழ் உள்ள புற்றுநோய் மருத்துவமனைகள் மற்றும் ஆராய்ச்சி மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏதேனும் திட்டம் உள்ளதா, நாடு முழுவதும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டோரின் தரவுகளை சேகரிகக NCG எடுத்த நடவடிக்கைகள் என்ன ஆகிய கேள்விகளை (பிரதமர் நரேந்திர மோடியிடம்) திமுக எம்.பி. இரா. கிரிராஜன் எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள பிரதமர் அலுவலக விவகாரங்கள் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், புற்று நோயைத் தடுப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் தேசிய புற்றுநோய் கட்டமைப்புக்கு இந்திய அணுசக்தித் துறை மூலம் மூலம் ரூ.72 கோடி வழங்கப்பட்டது என்றும், இரண்டாம் கட்டமான 2023 முதல் 2028ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு ரூ.177 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புற்றுநோய் சிகிச்சை மையங்கள் மற்றும் அமைப்புகள் என 13 உறுப்பினர்களுடன் இருந்த தேசிய புற்றுநோய் கட்டமைப்பு தற்போது 380 உறுப்பினர்களைக் கொண்ட வலுவான அமைப்பாக வளர்ந்துள்ளதாகவும், தகுதியுள்ள புற்றுநோய் மையங்கள், தொண்டு நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவை உறுப்பினர்களாக சேரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைக்கான தகுந்த மின்னணு மருத்துவ பதிவு தளங்களுக்கான அளவுகோல்களை NCG நிறுவியுள்ளதாகவும், இந்த தரநிலைகளை உறுதிப்படுத்த, EMR எனப்படும் மின்னணு மருத்துவ பதிவுகளை மேம்படுத்தவும் உதவி உள்ளதால், இதன் காரணமாக EMRக்கள் மூலம் எதிர்காலத்தில் புற்றுநோய் தொடர்பான தரவுகளை சேகரிக்க முடியும் என்றும் பதில் அளிக்கப் பட்டுள்ளது.

மருத்துவ வலையமைப்பை ஆதரிக்கும் உயிரிதொழில்நுட்ப தொழில் ஆராய்ச்சி உதவி கவுன்சிலின் (BIRAC) ஒரு பகுதியாக, 11 NCG மையங்கள் மார்பகம், பெருங்குடல், பித்தப்பை, லிம்போமாக்கள், நாள்பட்ட மைலாய்டு லுகேமியா, நுரையீரல் புற்றுநோய் பற்றிய தரவுகளை 36000 நோயாளிகளிடமிருந்து சேகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதுதவிர ஹீமாட்டாலஜிக்கல் புற்றுநோய் கூட்டமைப்பு இரத்த புற்றுநோய் நோயாளிகள் பற்றிய தரவுகளை 30000 நோயாளிகளிடமிருந்து சேகரித்து வைத்துள்ளதாகவும் ஒனிய அரசின் இணை அமைச்சர் பதிலில் கூறப்பட்டுள்ளது.

# நீலகிரி மாவட்டத்திற்கு செல்ல சுற்றுலா பயணிகள் ஆர்வம்!

ஊட்டி, ஆக. 11 –

ஊட்டி அருகே உள்ள அவலாஞ்சி மற்றும் எமரால்டு அணையின் இயற்கை அழகு சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பசுமை நிறைந்த காடுகள், புல்வெளிகள், பெரிய மலைகள், அருவிகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் அணைகள் என இயற்கை அழகு சூழ்ந்து காணப்படுகிறது. இதனைக் காணவே ஏராளமான வெளி மாநில மற்றும் வெளியூர்களிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் நாள்தோறும் வருகின்றனர். இங்கு நிலவும் காலநிலை சில வெளிநாடுகளிலும் காணப்படுவதால், வெளிநாடுகளில் இருந்தும் இதனை கண்டு ரசிக்க ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். ஊட்டிக்கு வரும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வழக்கம்போல் பூங்காக்கள் மற்றும் செயற்கையாக உருவாக்கப்பட்ட சுற்றுலாத்தலங்களை கண்டு ரசிக்க விரும்புவதில்லை. மாறாக இயற்கை சார்ந்த சுற்றுலாவையே விரும்புகின்றனர்.

இதனால் தற்போது நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான இயற்கை சார்ந்த பகுதிகளில் வனத்துறை சார்பில் சூழல் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த சூழல் சுற்றுலா தலங்களுக்கு செல்வதை தற்போது சுற்றுலா பயணிகள் அதிகம் விரும்புகின்றனர். இந்நிலையில் ஊட்டி அருகே உள்ள அவலாஞ்சி பகுதியில் சூழல் சுற்றுலா ஏற்படுத்தப்பட்டுள்ளது.



சிவகாசி மாநகர தி.மு.க. மற்றும் சிவகாசி தெற்கு கிழக்கு ஒன்றிய தி.மு.க.வின் சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அமைதி பேரணி சென்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், மாநகர வர்த்தக அணி வனராஜ், ஒன்றிய செயலாளர் விவேக் ராஜன், நகரச் செயலாளர் காளிராஜன், எம்.எ.சந்திரன், பொதுக் குழு உறுப்பினர் பால்ராஜ், மாவட்ட துணைச் செயலாளர் ராமமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத்திற்கு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம்,அலிஃப் மீரான்,கேபிள் குமரேசன்,மைக் மணி,அந்தோணி ராஜ், வினோத் குமார்,பல்க் சங்கர் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.